மாதம் : Jan 2020
இதழ் : 1



# இளங்கதிர்

மாதம் ஒருமுறை மலரும் மாணவர்களுக்கான மின்னிதழ்

# ஆசிரியர் பக்கம்

பதிப்பாசிரியர் : வெங்கட்
வடிவமைப்பு : ரமேஷ்
இணை ஆசிரியர்கள் : அபிராமி
கௌரி
சுந்தர்

அன்புத் தமிழ் உறவுகளே, வணக்கம்.
ஆதி பகவன் ஆசியுடனும்
தமிழ்த்தொண்டர்கள் துணையுடனும்
மின்னிதழ் எனும் இந்த மாபெரும் இமாலயப்
பணியைத் தொடங்கிவிட்டோம். இனி இந்தத்
தேரின் வடம் நம் எல்லோரது கைகளில்.
ஈதல் இசை பட வாழ்தல் தமிழரின்
தலையாய வாழ்க்கை முறை. உணவு,
வயிற்றுக்கு மட்டும் அல்லாது செவிக்கும்
உண்டு என்று பறை சாற்றிய நாகரீகம்
நமதே. ஊக்குவிப்போம் நம் பிள்ளைகளை
மற்றுமோர் ஊடாக, தமிழ் பயில, தமிழ்
பழக, அந்த நாகரீகத்தைச் சுவைத்து
மகிழ்ந்திட. எட்டாக் கல்வியாய்
இல்லாது, இங்கே வளரும்
நம் பிள்ளைகளுக்குத்
தமிழை இன்னுமோர்
வழியில் எடுத்துச்
செல்வோம்.
ஏணியாய் நாம் இருந்து
அவர்கள் மென்மேலும்
தமிழ் அரவணைக்க
வழிவகுப்போம். ஐயங்கள்
கலைவோம். ஒப்பில்லாத தமிழ்
மொழியை அனைவரும் சேர்ந்து
கொண்டாடிடவே இந்த மின்னிதழ்.
ஒராயிரம் ஈராயிரம் என நம்
மொழியின் வயதோ ஆயிரங்களில்
இருப்பினும் நம்மால் இயன்றதை
அடுத்த தலைமுறைக்கு அளிப்பது நம்
ஒவ்வொருவரின் கடமை. ஔவைக்கிழவி
அதை வானிலிருந்து நிச்சயம் காண்பாள்,
தொடர்க உம் பணி என மனதார
வாழ்த்துவாள்.
தமிழ்த்தாயே துணை நீயே.
தமிழ் வாழ்க!

அன்பன்,
**ஆசிரியர்.**







# அன்புள்ள வாசகர்களே...

சுந்தரராஜன். மில்டன் கீன்ஸ் (தலைமை ஆசிரியர்)

இன்று நம் பள்ளியின் வரலாற்றில் ஒரு முக்கியமான நாள். பள்ளியின் மின்னிதழான இளங்கதிரின் முதல் இதழ் மலரும் நாள்.

வாசிப்பதும் எழுதுவதும் கற்றறிந்தவர்களுக்கு சுவாசம் போலவாகும் என்று சொல்வார்கள். வாசிப்பதற்கு வாய்ப்பளிக்க பள்ளி நூலகம் இருப்பதைப் போல, எழுத ஆர்வம் உடைய மாணவ, மாணவியர், பெற்றோர் மற்றும் ஆசிரியர்களின் படைப்புகளை இவ்வுலகத்துக்கு எடுத்துச் செல்லும் வாகனமாக இந்த மின்னிதழ் இருக்கும். பள்ளியின் பத்தாவது ஆண்டில் நமது பள்ளியின் சார்பாக மின்னிதழ் வெளிவருவதை மிகவும் பெருமையாக கருதுகிறேன்.

இன்று உதயமாகும் இளங்கதிர் அதனுடைய ஒளியால் அனைவரின் உள்ளத்தையும் மகிழ்வடையச் செய்யும் என நான் உறுதியாக நம்புகிறேன்.

இந்த இதழுக்காக கடும் உழைப்பை நல்கிய வெங்கட் அவர்களையும் , மிக அருமையாக வடிவமைப்பு செய்த ரமேஷ் அவர்களையும் எவ்வளவு பாராட்டினாலும் அது மிகையாகாது. பொங்கல் விழாவின் வேலைகளுக்கு இடையேயும் இந்த இதழுக்காக படைப்புகளை உருவாக்கி அளித்த ஆசிரியர்கள் கௌரி மற்றும் அபிராமிக்கு என் நன்றிகள். இந்த இதழுக்காக ஆரம்ப வேலைகளை முன்னெடுத்து, குழுவை ஒருங்கிணைத்த ராமநாதன் அவர்களுக்கும் எனது நன்றிகள்.

பதிப்பாசிரியர் சொல்லியதைப் போல, இந்த இதழின் வெற்றி உங்கள் அனைவரிடமும் இருக்கிறது. முதலாவதாக, பெற்றோர், ஆசிரியர் , மற்றும் மாணவர்கள் அனைவரும் இந்த இதழைத் தவறாது வாசிக்க வேண்டுகிறேன். அதன் நிறை குறைகளை ஆசிரியர் குழுவுக்குத் தெரியப்படுத்துங்கள். அடுத்ததாக, படைப்புகளை அனுப்ப வேண்டும். அது மாணவர்களின் திட்டப் பணியாக இருக்கலாம், பெற்றோர் எழுதிய கதை / கவிதையாக இருக்கலாம், மாணவர்கள் வேறு துறையில் (படிப்பு, விளையாட்டு) செய்த சாதனையாகவும் இருக்கலாம்.

இன்று, முதல் இதழ் காணும் இளங்கதிர், பல நூறு இதழ்கள் காண என் வாழ்த்துகள் .

# தென்கச்சி கதைகள்

"இன்று ஒரு தகவல்" தென்கச்சி கோ.ஸ்வாமிநாதன் ஐயா வானொலியில் நமக்களித்த வேடிக்கை கதைகளின் தொகுப்புகளிலிருந்து :

ஒருவன் திருக்குறள் நன்கு மனப்பாடம் செய்ய ஆசைப்பட்டான். தனது தம்பியை அருகில் அழைத்து "அடேய், தம்பி. எனக்குத் திருக்குறள் மனப்பாடம் ரொம்ப ஆசை. சில அதிகாரங்கள் மனப்பாடம் செய்துவிட்டேன். உனக்கு அவைகளை ஒப்பித்துக் காட்டுகிறேன்.
தப்பாக இருந்தால் என் தலையில் குட்டு!" என்றான்.

தம்பியும் "ஆகட்டும் அண்ணா, அதுக்கென்னனு சொல்லிட்டுத் தயாரானான்.

உடனே இவன் ஒரு திருக்குறள் புத்தகம் எடுத்து அவன்கிட்ட குடுத்து "இந்தா இத பிடி, இந்த புத்தகத்ல எல்லா திருக்குறளும் இருக்கு. நான் சொல்லச் சொல்ல திருக்குறள் சரியா இருக்கான்னு பாரு." சொல்லிட்டு, ஆரம்பிச்சான்.

தொண்டைய கணச்சிக்கிட்டு, "அகர முதல எழுத்தெல்லாம் ஆதி பகவன்..." அப்படினு சொல்லி முடிக்கறதுக்குள்ள தம்பி நறுக்ன்னு மண்டைல ஒங்கி ஒரு குட்டு வச்சான்.
இவனுக்கு ஒண்ணும் புரியல. தலைய தடவிக்கிட்டே கோவமா,


"இப்போ எதுக்குடா என்ன குட்டுன, குறள் சரியாத்தானே சொன்னேன்." னு கேட்டான்

உடனே தம்பி "நீ எங்க சரியா சொன்ன? தப்பா சொன்ன, அதான் குட்டினேன்."

அதுக்கு இவன், "தப்பா? என்னடா தப்பா சொன்னேன்?" னு கேக்க,

தம்பி திருக்குறள் புத்தகம் பார்த்துச் சொன்னான் "அண்ணே. நீ அகர முதல எழுத்தெல்லாம் அப்படீன்னு சொன்ன. ஆனா இங்க புத்தகத்ல அகர முதல வெழுத்தெல்லாம் அப்படீன்னு இல்ல இருக்கு.

நீ ஒழுங்கா படிச்சிட்டு மறுபடியும் வா " னு சொல்லிட்டு நடைய கட்டினான்.





பள்ளி மாணவர்கள் தங்களுக்குப் பிடித்த குறள்கள் இரண்டைத் தேர்வு செய்து ஒவ்வொரு இதழிலும் நம்மிடம் பகிர்வர்.
இதோ இந்த வாரம் குறள் தெரிவு: வேதாந்த், நிலை: 3

# குறள் இனிது


**இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்நாண நன்னயம் செய்து விடல்**

விளக்கம்:
நமக்குத் தீமை செய்தவரைத் தண்டிக்கும் வழி, அவர் வெட்கப்படும்படி அவருக்கு நன்மையைச் செய்து அவர் செய்த தீமையையும், நாம் செய்த நன்மையையும் மறந்துவிடுவதே.

**உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம் தொழுதுண்டு பின்செல் பவர்.**

விளக்கம்:
பிறர்க்காகவும் உழுது தாமும் உண்டு வாழ்பவரே வாழ்பவர். மற்றவர் எல்லாரும் பிறரைத் தொழுது அவர் தருவதை உண்டு தருபவர் பின்னே செல்பவர் ஆவர்.

காப்புரிமை: www.ytamizh.com/




# அறிவோம் தமிழா

தேனி மாவட்டம் பாலார் பட்டி கிராமத்தில் முல்லைப் பெரியாறு அணையைக் கட்டிய ஆங்கிலேயப் பொறியாளர் பென்னி குய்க் அவர்களுக்கு எடுக்கும் விழா. ஜனவரி 15-ம் தேதி பென்னி குயிக் பிறந்த நாள் ஆதலால் ஜனவரி 15-ம் தேதி தான் எல்லா ஆண்டும் பொங்கலைக் கொண்டாடுவது தேனி--மதுரை மாவட்ட விவசாயிகளுக்கு ஒரு விசேஷ நன்றித் திருவிழாகிப் போன சரிதம்

# கவித்துளி

## துரித ஆண்டு 2020

வாணவேடிக்கை வரையறுக்க
வாழ்த்துகள் வந்து குவிய,
விடிய விடிய விழாக்கோலம்
என விதிமுறைகள் மாறுகிறதே.

புத்தாண்டுகள் அடிக்கடி வருகிறதோ?
நடுவில் கொஞ்சம் மாதங்கள்
காணாதது போல்
சடுதியில் வரும் அவசரம் என்ன?

கடந்த வருட கணக்குகள்
முடிப்பதில்தான் என்ன ஒரு ஆனந்தம்!
துரித வாழ்க்கையில்
எதேர்ச்சைகள் அரிதாகிவிட்டனவோ?

சுத்தும் பூமி சீராகத்தான் சுழல்கிறது.
எனக்கு ஏன் அவசரம்? இந்த முறை
வேண்டுவதெல்லாம்
இவையே

WiFi இல்லா வனாந்திரத்தில்
வாக்கிங் போக வேண்டும்.
டிஜிடலில் சேர்த்த நிமிடங்களை
முகநூலிடம் இழக்காமல்
காக்க வேண்டும்.
மாதம் ஒரு புத்தகமாவது
கையிலேந்தி படிக்க வேண்டும்.

என்னைப்போல் ஏக்கம் கொண்டவராயின்
அரட்டை அடிக்க
நீங்களும் அருகில் வேண்டும்.



கவித்துளி, நம் பள்ளிசார் வட்டத்தினுள்ள நம்மில் ஒருவரின் படைப்பை ஏந்திவரும். இந்த வாரம் நம் சிந்தனைக்கு விருந்தாய் தனது படைப்பைத் தந்து உதவிய **மதியாழிக்கு (புனைப்பெயர்) நன்றி..**

# வீட்டுப்பாடங்கள்

## கதையின் கதாபாத்திரங்கள்

- தூரவி 1
- தூரவி 2
- பெண்

## கதையின் கருத்து

நாமும் நமது வாழ்வில் பிறர் ஏற்படுத்திய காயங்களை மனதில் தூக்கிக்கொண்டு செல்கின்றோம். எது முக்கியம் எது தேவையற்றது என்பதைப் பகுத்துப் பார்க்கத் தெரிந்துவிட்டால், வாழ்வு என்றென்றும் ஆனந்தமே.

எனக்கு இந்த கதை மிகவும் பிடித்திருந்தது. நாம் அமைதியான வாழ்க்கை வாழ இந்த கருத்தை கடைபிடிக்க வேண்டும்.

திவ்யா கணேஷ்
வகுப்பு 5




Project
By
Poorvaja


புத்தக ஆய்வு
ரேச்சல்
புத்தக வகை: நன்றி மறக்கலாமா
எனக்கு பிடித்த கதாபாத்திரம்:
எனக்கு பிடித்த கதாபாத்திரம் மகிழன் ஏன் என்றால் அவர் எல்லோருக்கும் உதவி செய்தார். அவர் பாம்பு, புலி, மனிதன், திரங்கு எல்லோரும் உதவி கேட்டபொழுது உடனே உதவி செய்தார்.
கதை அமைப்பு:
இந்த கதை மூன்று இடத்தில் நடந்தது. மகிழனுடைய வீட்டில் கதை ஆரம்பித்தது. அதற்கு பிறகு காட்டில் நடந்தது. கடைசியில், சிறைச்சாலையிலும் அரண்மனையிலும் முடிவடைந்தது.
கதை சுருக்கம்:
மகிழன் தன மனைவி இரண்டு குழந்தைகளுடன் வாழ் வந்தான். வேலை தேடி காடு வழியே வியாழது விழுந்து கிடந்து ஒரு மனிதனையும் கிடைக்காமல் சோர் திரங்கு கிராட்சை கூண்டில் உள்ள கொள்ளும்படி மகிழன் அந்த மனிதனிடம் ஆனால் அவன் மகிழனை சிறைச்சாலையின் போடுவிக்தார் பாம்பின் உதவியால் சிறையிலி வந்தான்.
எனக்கு இந்த கதை மிகவும் பிடித்தது, ஏன் என்றால் நல்ல நீதியும் நல்ல கருத்தும் இருந்தது. நான் இந்தக் கதைக்கு தரும் மதிப்பு - 3½.

# உணவுப் பழக்கம்

நம்ம மக்கள் எல்லோருடைய மனதையும் கவர்ந்த ஒரு பாரம்பரிய உணவு, அப்படின்னு சொன்னா, அது நம்ம இட்லி (IDLY) தான்,
சுட சுட ஆவிபரக்க மல்லிகைப்பூ மாதிரி நம்ம இட்லிய, தேங்காய் சட்னி, சாம்பாரோட வச்சு சாப்பிட்டா அதன் சுவையே தனிதான். இப்படி நம்ம எல்லாரும் விரும்பி சாப்பிடும் இட்லி, முதலில் எங்கிருந்து உருவாச்சு? பாரம்பரிய உணவுமுறை பற்றி ஆராய்ச்சி செய்த திரு. கே. டி. ஆச்சார்யா(Food Historian) என்ன சொல்றாருன்னா, இட்லி முதலில் இந்தோனேசியா (Indonesia)வில் இருந்து, அவங்க (அந்த மக்களின்) கலாச்சாரப்படி அவித்து சாப்பிடக்கூடிய உணவு (Kedli) அவித்த அரிசி கேக் மற்றும் (Bura) தேங்காய் பொடியுடன் சாப்பிடும் சதுரமான அரிசி கேக் என்பதுதான், தென்கிழக்கு இந்தியாவுக்கும் தென் இந்தியாவுக்கும் இடையே இருந்த வாணிக தொடர்பு ஒரு காலத்துல இருந்தது உண்மைனா இதுவும் நம்பத்தகுந்த உண்மை என்றுதான் சொல்லனும். நம்ம இட்லி வேறு எங்கிருந்தோ வந்திருந்தாலும் அதை சரியான முறையில் (Perfected) செய்யக் கற்றுக் கொண்ட பெருமை தென்இந்தியர்களையே சேரும்.

இன்றைய நடைமுறையில், நம்ம வாழ்கையில சாப்பிடும் துரித உணவு (Fast Food) வெளிநாட்டில் மட்டுமில்லாமல் இந்தியாவிலும் நிறையவே வரத் துவங்கிவிட்டது. பீசா, பர்கர்னு சாப்பிட்டு நாமே நம்ம பாரம்பரிய உணவு முறையைமறந்து நம்முடைய கலாச்சாரத்தை அடையாளம் தெரியாமல் அழித்துக் கொண்டிருக்கிறோம். ராகி, கம்பு, கேழ்வரகு என்றால் என்னவென்று இந்த காலத்துக் குழந்தைகளுக்குத் தெரியாது. அதை விட இதையெல்லாம் சத்து குறையாம சரியாக எப்படி சமைத்து சாப்பிடுவது என்று இன்று யாருக்காவது தெரியுமா?













ஆனால் இட்லி செய்றது ரொம்ப சுலபம். பத்தே நிமிடத்தில் செய்யக் கூடிய இந்த உணவை சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை விரும்பி ருசிக்கலாம். அதைவிட ஒரு முக்கியமான உண்மை என்ன தெரியுமா? இரண்டு இட்லில இருப்பது வெறும் 200 கலோரிகள் மட்டுமே.

புளித்த உணவு (Fermented Food) அதாவது நம்ம இட்லி, தோசை, வட இந்தியாவின் டோக்லா, ரொட்டி இதெல்லாம் நம்ம நினைப்பதை விட மிகவும் நல்லது. ஆமாம் புளித்த உணவு தனிப்பட்ட சுவையைத் தருவதோட மட்டுமில்லாமல் அதை நாம் பாதுகாத்து வைத்து (Preservation) சாப்பிடவும்முடியும். புளித்த உணவு நம்ம உணவு முறையில் 7000 ஆண்டுகளுக்கு முன்பே இருந்ததாக தொல்பொருள் கண்டுபிடிப்பில் (Archeological Findings) சொல்லி இருக்காங்க.

இன்னொரு பிரபலமான உணவான தயிர் நல்ல பாக்டீரியாவை வயிற்றில் உருவாக்குகிறது. இப்படி நிறைய நல்ல விஷயங்கள் நிரம்பி இருக்கிற நம்ம பாரம்பரிய உணவை மீண்டும் வெளிச்சத்துக்கு கொண்டுவருவோம், நம் உணவை மதிக்கக் கற்றுக் கொள்வோம். ஒரு சமூகத்தில் தன்னுடைய உணவு எங்கிருந்து வருகிறது என்று தெரியவில்லை என்றால் அந்தச் சமூகத்தில் கலாச்சாரம் அழிந்துவிட்டது என்றே அர்த்தம். மனிதன் கலாச்சார அடையாளம் இல்லையென்றால் மடிந்துபோவான்.

**காப்புரிமை**: The Better India

**விஜி ரமேஷ்**



# இந்த ஜனவரி மாதம் பிறந்த நாள் கொண்டாடும் நம் பள்ளிப் பிள்ளைகள்

## அடிப்படை நிலை:1

பார்திவ் சசிகுமார்

## அடிப்படை நிலை:2

அந்தியா மியா பாஸ்டின்
ஆதிரயன் குமரன்

## நிலை:1

தன்விகா ரகுபாலன்
பரத் சுதன் சிவகுமார்
அபினவ் கிருஷ்ணா சிவகுமார்
அபர்ணா தர்ஷிணி சிவகுமார்

## நிலை:2

இஷான் முரளிகிருஷ்ணன்
திஷா அருண்விஜய்
மைத்ரேயி மோகன் குமார்

## நிலை:3

கௌஷல் அருண்குமார்

## நிலை:4


மீனல் பகவதி

## நிலை:5

ஜோசப் பெர்னாண்டோ

**பள்ளியின் சார்பாக... உங்கள் அனைவருக்கும் பிறந்த நாள் வாழ்த்துகள்...**

# மூளைக்கு வேலை



## மேல்-கீழ்

1 வேலை வாரத்தின் முதல் நாள் (4)
2 பறப்பன; ஒன்றுக்கு மேல் (5)
3 மார்கழி மாதத்தில் தெருவெங்கும் (3)
4 ___ பொருள் ஆராய்ச்சி (2)
5 தின்ன கூலியா (4)
6 தமிழர்களின் ஹலோ (5)
7 இது இல்லாமல் ஏது கணக்கு (3,3)
8 மாரீசன் வந்த வேடம் (2)
9 பானம்; சிறுவர்களிடம் அதிகம் உள்ளது (5)
10 நல்ல எண்ணம்.. நல்ல நாள் (6)
11 படித்தும் வாங்கலாம், காற்றிலும் விடலாம் (4)
12 முடிந்தது செய்வது, ஆமையிடம் தோற்றது (3)
13 பிள்ளைங்க (4)
14 காரமான வினைத்தொகை (4)
15 தனியாய் இல்லாமல்...(2)
24 தனித்து வரும் இரட்டைக்கிளவி (2)
25 முக்கனியில் ஒன்று (2)

## இடம்-வலம்


1 தமிழ்ப்புலவர், பொய்யாமொழி (7)
16 கடல் கடந்தும் இதன் மனம் (2)
2 கற்க, கற்பிக்க (3)
14 ஒய்யாரமாய் ஆட (4)
5 இது நாம் அடையாளம் (6)
8 சேலத்தில் இது மிக ருசி (5)
12 ___ பூசணிக்காய் (2)
9 நம் இரத்தம் (3)
4 முடிவில்லை (4)
17 வண்டி நகர இது தேவை (5)
18 பூமியின் பக்கத்து வீடு (4)
19 அடர்ந்த காடு (4)
20 தண்ணீர் பிடிக்க, குடிக்க, ஊற்ற (3)
21 இதை அன்றே தமிழ் ஒருவர் ஓட்டினார் (4)
22 குட்டியை மடியில் சுமக்கும் தாய் (4)
23 ___ நான் ஊற கல்லும் தேயும் (4)
26 பசு உணவு (4)

**வெற்றிகரமாக குறுக்கெழுத்துப் போட்டியை முடித்தவர்கள் உங்கள் விடைகளைக் கீழேயுள்ள பள்ளியின் FB முகவரியில் பதிவிடலாமே**

# தமிழ்ப்பள்ளி நிகழ்வுகள்

ஜனவரி

| | |
|---|---|
| 19/01 | பள்ளியின் 10ஆம் ஆண்டு பொங்கல் விழா. மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள் |
| 19/01 | பள்ளியின் மின்னிதழ் 'இளங்கதிர்' முதல் இதழ் வெளியாகும் நாள். |
| 26/01 | இந்தப் பருவத்துக்கான மாணவர்களின் தேர்ச்சி அறிக்கைகள் அவர்தம் பெற்றோர்களுக்கு அனுப்பப்படும். |
| 26/01 | சில வகுப்புகளுக்கு பெற்றோர் ஆசிரியர் சந்திப்பு நடைபெறும். |



நிறைவாக...
இந்த மின்னிதழ் உங்களுக்கு ஒரு இனிய அனுபவத்தைத் தந்திட நாங்கள் முழுமையாய் முயற்சித்துள்ளோம்.
அதன் விளைவாய் உங்களுக்கு ஒரு புதிய சுகானுபவம் கிட்டியிருக்கும் என நம்புகிறோம்.
கெடுவாய்ப்பாக, எதேனும் உங்கள் மனதை பாதித்திருந்தாலோ, மனம் புண்படும்படி அமைந்திருந்தாலோ வருந்துகிறோம்.
உங்களதுபுகார்களை/மேலதிககருத்துகளைக்கீழ்க்கண்டமின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம்.
அதுபோல், உங்கள் பாராட்டுகளையும் எங்களிடம் பகிர்ந்து எங்களுக்கு உற்சாகமூட்டலாமே.
நீங்கள் விரும்பும் தமிழ் உலகிற்கு பயனளிக்கும் வேறு பல விடயங்கள் இந்த மின்னிதழில் சேர்த்திட எங்களைத் தொடர்புகொள்ளுங்கள்.
நிச்சயம் செவி சாய்ப்போம். நன்றி

வேண்டுகோள்:
இந்த மின்னிதழ் நம் மொழி சார்ந்தும் நம் பள்ளி மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், தன்னார்வலர்கள் ஆகியோரது படைப்புகளைத் தாங்கியும் வலம் வரும்.
உங்களது படைப்புகள் இதில் இடம் பெற ஆசிரியர் பக்கம் பகுதியிலுள்ள எங்கள் குழுவில் ஒருவரையோ அல்லது கீழே உள்ள மின்னஞ்சல் முகவரியையோ தொடர்பு கொள்ளுங்கள். நன்றி

மின்னிதழ் குழு தொடர்புகொள்ள:
emagazine@mktamil.org